SOSA-I-M

## மூன்றாம் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 100

வகுப்பு - எட்டு - ___________

நேரம்: 2.30மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
|---|---|
| இடம்: | வரிசை எண்: |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10 × 1 = 10**

1. சிங்கம் ___________ யில் வாழும்.
   அ) மாயை ஆ) முழை இ) அலை
2. இந்த ___________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு
   அ) வையம் ஆ) வானம் இ) கானகம்
3. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ___________
   அ) சென்னை ஆ) கோவை இ) மதுரை
4. ஒன்றே ___________ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.
   அ) குலம் ஆ) குளம் இ) குணம்
5. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ___________
   அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) துறந்தனர்
6. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ___________
   அ) வானம் ஆ) மழை இ) கதிரவன்
7. அயோத்திதாசர் நடத்திய இதழ் ___________
   அ) காலணாத் தமிழன் ஆ) ஒரு பைசாத் தமிழன் இ) அரைப்பைசாத் தமிழன்
8. வறுமை வந்த காலத்தில் ___________ குறையாமல் வாழ வேண்டும்.
   அ) இன்பம் ஆ) ஏக்கம் இ) ஊக்கம்
9. அடுத்தவர் வாழ்வைக் கண்டு ___________ கொள்ளக் கூடாது.
   அ) உவகை ஆ) அழுக்காறு இ) நிறை
10. பூனா ஒப்பந்தம் ___________ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.
    அ) பேச்சுரிமையை ஆ) எழுத்துரிமையை இ) இரட்டை வாக்குரிமையை

**II. பிரித்து எழுதுக.** **4 × 1 = 4**

11. வெங்கரி
12. நமனில்லை
13. ஊராண்மை
14. இன்பதுன்பம்

**III. சேர்த்து எழுதுக.** 4 × 1 = 4

15. இதம் + தரும்
16. உள் + இருக்கும்
17. திரிந்து + அற்று
18. குணங்கள் + எல்லாம்

**IV. பொருத்துக.** 4 × 1 = 4

19.

| | | | |
|---|---|---|---|
| அ) | இன்பம் தருவது | - | செல்வம் மிகுந்த காலம் |
| ஆ) | நட்பு என்பது | - | குன்றிமணியளவு தவறு |
| இ) | பெருமையை அழிப்பது | - | பண்புடையவர் நட்பு |
| ஈ) | பணிவு கொள்ளும் காலம் | - | சிரித்து மகிழ மட்டுமன்று |

**V. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.** 6 × 2 = 12

20. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?
21. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.
22. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
23. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
24. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
25. எது பெருமையைத் தரும்?
26. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
27. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.

**VI. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

28. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
29. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?
30. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?
31. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?
32. பூமி எப்போது பாதையாகும்?

**VII. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 6 = 6

33. எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

**VIII. மனப்பாடப்பகுதி** 4 × 2 = 6

34. ‘வழிவர்’ எனத் தொடங்கும் ‘படை வேழம்’ பாடலை அடிமாறாமல் எழுதுக.

(அல்லது)

‘ஒன்றே’ எனத் தொடங்கும் ‘ஒன்றே குலம்’ பாடலை அடிமாறாமல் எழுதுக.

35. ‘கான’ எனத் தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.

## இலக்கணம்

**IX. சரியான விடையை எழுதுக.** 5 × 1 = 5

36. அசை ______________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) நான்கு இ) மூன்று

37. அடி ______________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) ஐந்து இ) எட்டு

38. பிறிது மொழிதல் அணியில் ______________ மட்டும் இடம் பெறும்.

அ) உவமேயம் ஆ) சந்தம் இ) உவமை

39. ஒரே செய்யுளை இருபொருள்படும் படி பாடுவது ______________ அணி

அ) இயல்பு நவிற்சி ஆ) இரட்டுறமொழிதல் இ) உயர்வு நவிற்சி

40. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர் ______________ அணி.

அ) வேற்றுமை ஆ) உவமை இ) சிலேடை

**X. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** 4 × 3 = 12

41. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

42. இரு வகை அசைகளையும் விளக்குக.

43. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

44. சந்திப்பிழை என்றால் என்ன?

45. வேற்றுமை அணி என்றால் என்ன?

46. இரட்டுற மொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?

**XI. எவையேனும் ஆறனுக்கு விடையளி.** 6 × 2 = 12

47. சொல்லும் பொருளும்:

அ) கரி ஆ) மையல்

48. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் ______________

ஆ) பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கார் ______________ சென்றார்.

49. கலைச்சொல் தருக.

அ) Victory ஆ) Confidence

50. ஓரெழுத்தில் விடை தருக.

அ) இது மணம் வீசும் ஆ) அழைக்கும் எழுத்து

51. சொலவடையினை கண்டுபிடித்து எழுதுக.

அ) தாயும் __________ ஆ) ஆட்டம் __________

52. பின்வரும் வினாக்களைப் பார்த்து இரு வினாக்களுக்கு ஒரு விடை தருக.

அ) ஆடை நெய்வது எதனாலே? அறிவைப் பெறுவது எதனாலே?

ஆ) கதிரவன் மறையும் நேரம் எது? கழுத்தில் அழகாய்ச் சூடுவது எது?

53. சொல்லின் இரண்டு பொருளை எழுதுக.

அ) அரி ஆ) இரவி

54. தொடர் அமைத்து எழுதுக. அ) தன்னம்பிக்கை

**XII. தமிழாக்கம் தருக.** 1 × 5 = 5

55. அ) A beauty of the soul is known in the face.

ஆ) Knowledge is power.

இ) Blood is thicker than water.

ஈ) Blessed are the meek, for they shall inherit the earth.

உ) A calm before a storm

**XIII. பின்வரும் தொடர்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.** 1 × 5 = 5

56. அ) அதைச் செய்தது நான் அன்று.

ஆ) பானையை உடைத்தது கண்ணன் அல்ல

இ) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.

ஈ) சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

உ) பகைவர் நீவர் அல்லர்.

**XIV. கட்டுரை எழுதுக.** 1 × 6 = 6

57. நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.

(அல்லது)

உழைப்பே உயர்வு